T-UN-520

# மகளிர் இல்லம்,

அமராவதிபுதூர்.

1944.

அதிபர்: சொ. முருகப்பா.

# மகளிர் இல்லம்,

## அமராவதிபுதூர்.

மகளிர் இல்லம், பெண் மக்களின் அறிவு, உரிமை, ஒழுக்கம் ஆகியவற்றை வளர்த்துப் பெண் குலத்தை மேன்மையுறச் செய்ய வேண்டுமென்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஈசுவர௵ பங்குனிமீ 28உ (10—4—38) யன்று தொடங்கப்பெற்றது. சென்னை அரசாங்கக் கோர்ட் மந்திரி கனம் கே. ராமன் மேனன் தலைமையில், கல்வி மந்திரி கனம் டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் திறந்து வைத்தார்கள். இங்கே பெண் பாடசாலை ஒன்றும், மாண்டிசோரி முறையில் குழந்தைகளுக்காகப் பாடசாலை யொன்றும் நடைபெறுகின்றன.

அமரர் கி. அருணாசல முதலியார் அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்: திருமதி சியாமளா அருணாசலம் சீர்காழி.
(1982)

## பெண் பாடசாலை

இந்த மகளிர் இல்லத்தின் ஒரு பகுதியாக நடைபெறும் பெண் பாடசாலையானது பிரமாதி ஆவணிமீ 14உ (30—8—39) யன்று ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தா அவர்களால் திறந்து வைக்கப்பெற்று நடைபெற்று வருகிறது. இதில் இப்பொழுது 60 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். ட்ரெயினிங் பாஸ் செய்த மூன்று உபாத்தியாயினிகள் இருந்து கற்பித்து வருகின்றனர். ஒன்று முதல் ஐந்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன. காலை 10 - முதல் 1- மணி வரையும், மாலை 3 - முதல் 5 - 30 வரையும் வகுப்பு நடக்கும். ஞாயிறு பிற்பகலும், திங்கள் முழுமையும் விடுமுறை.

### படிப்பு

தமிழ், இலக்கியம், இலக்கணம், ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், பூகோளம், அரசியல், விஞ்ஞானம், சங்கீதம், பொது அறிவு முதலிய பாடங்கள் படிப்பிக்கப்படுகின்றன.

### கைத்தொழில்

தையல், பின்னல், பூவேலை முதலிய நூல் வேலைகள், காகிதம் செய்தல், நூல் நூற்றல் ஆகிய தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன.

## மாண்டிசோரிப் பாடசாலை

டாக்டர் மாடம் மாண்டிசோரி அம்மையார் இத்தாலி தேசத்தில் பிறந்த பெண்மணியாவர். இவருக்கு இப்பொழுது வயது 74. குழந்தைகளின் மனப்பண்பைத் தெளிவாகத் தெரிந்து, அவர்களை உயர்வுறச் செய்யும் வழிகளைக் கண்டு, அனுபவ சாத்தியமாகக் கல்வி முறையை ஒழுங்கு செய்திருக்கிறார்கள். இவருடைய முறை பூலோகமெங்கும் பாராட்டப் பட்டு வருகிறது. இப்பொழுது இவ்வம்மையார் தமிழ் நாட்டில் தங்கி யிருக்கிறார்கள். இவர்களுடைய முறையைப் பற்றி விக்ரமஹு தைமீ 6உ (19—1—41)ல் ஐந்து குழந்தை களுடன் இந்தப் பாடசாலை தொடங்கப்பெற்று நடந்து வருகிறது. இப்பொழுது இதில் 30 குழந்தைகள் பயின்று வருகிறார்கள். மாண்டிசோரி 'டிப்ளமா' பெற்ற உபாத்யாயர் கள் இருந்து பள்ளிக்கூடத்தை நடத்தி வருகின்றனர். படிப் பதற்கான சாமான்கள் மட்டும் சுமார் 750 ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளன. காலை 9 - முதல் 11 - வரையும், பகல் 3 - முதல் 5 - வரையும் வகுப்பு நடக்கிறது. திங்கட்கிழமை விடுமுறை.

## இடவசதி

இந்த ஸ்தாபனத்தின் பொருட்டு காரைக்குடி — தேவ கோட்டை மெயின் ரோட்டில் 76 ஏக்கர் 20 செண்ட் இடம் வாங்கப்பெற்றது. இதில் பல கட்டிடங்கள் கட்டப்பட்டிருக் கின்றன. தண்ணீர் வசதி நிரம்ப இருக்கிறது. கிணறு கள் பலவும் சிறிய ஊருணி ஒன்றும், வெட்டப்பட்டுள்ளன. அசுத்த மென்பதை அறியாத தூய காற்று இருபத்து நான்கு மணி நேரமும் வீசிக்கொண்டிருக்கிறது. இரவு பகல் எந்த நேரத்திலும் எந்த ஊருக்கு வேண்டுமானாலும் போக வர வசதி யாக மோட்டார் பஸ் ஓடிக்கொண்டே யிருக்கிறது. இரண்டு மைல் தூரத்தில் தேவகோட்டை ரஸ்தா ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. சமைப்பதற்கும், உண்பதற்கும், உறங்குதற்கும், குளிப்பதற்கும், படிப்பதற்கும், கைத்தொழில் செய்வதற்கும் வசதியான கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. விளையாடு தற்கு வேண்டிய இடங்கள் வசதி செய்யப்பட்டுள்ளன. தண்ணீர்க் குழாய், மின்சார விளக்கு வசதிகளும் ஏற்பட்டிருக் கின்றன. சுமார் 50,000 ரூபா வரை இடம், கட்டிடங்கட் கும் மற்ற வசதி செய்யவும் செலவிடப் பட்டிருக்கிறது.

# ஆஸ்டல்

பிள்ளைகள் இங்கே தங்கி யிருந்து படிக்க எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. சாப்பாடும் மற்ற போஷணைகளும் மூன்று பிரிவாக உள்ளன. பெண் பாடசாலையில் படிக்கும் உள்ளூர்ப் பிள்ளைகள், பெண் பாடசாலையில் படிக்கும் வெளியூர்ப் பிள்ளைகள், மாண்டிசோரி வகுப்பில் பயிலும் சிறு குழந்தைகள். சாப்பாடு முழுமையும் சைவச்சாப்பாடுதான்.

## உள்ளூர்ப் பிள்ளைகள்

உள்ளூர்ப் பிள்ளைகள் மட்டுமே இதில் சேர்க்கப் பெறுகிறார்கள். பகல் உணவு மட்டும் இலவசமாகப் போடப்படுகிறது. பாடசாலைப் படிப்புக்கும் சம்பளம் கிடையாது. 30—8—39 முதல் நான்கு ஆண்டுகளாக இது நடைபெற்று வருகிறது. இதில் 30 பிள்ளைகள் உள்ளனர்.

## பெண்கள் பகுதி

இதில் 6 வயது முதல் 13 வயது வரையுள்ள பெண் குழந்தைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப் பெறுவர். காலையில் உடற்பயிற்சியும், மாலையில் வீட்டுப்பாடமும் உண்டு. வாரத்தில் ஒரு நாள் விடுமுறையாகிய திங்களன்று சமையலும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இந்தப் பிள்ளைகளைக் கவனிக்க வார்டன் உண்டு. வாரத்தில் ஒருநாள் எண்ணை முழுக்கு நடக்கும்.

**உணவு விபரம்:-**

| | | |
|---|---|---|
| காலை | 9-00 | இட்லி, தோசை, கோதுமை தோசை, கேப்பை சேர்ந்த தோசை எதாவதொன்று. பால் சேர்ந்த பானம். |
| பகல் | 1-00 | சாதம், நெய், குழம்பு, ரசம், மோர், இரண்டு கறிகளுடன். |
| மாலை | 5-30 | இனிப்பு, காரம் எதாவதொரு பலகாரம், பால் சேர்ந்த பானம். |
| இரவு | 9-00 | சாதம், நெய், குழம்பு, ரசம், மோர், இரண்டு கறிகளுடன். |

அப்பளம், பாயசம், தயிர் முதலியன
சில தினங்களில் உண்டு.

**கட்டண விபரம்**

| | | | |
|---|---|---|---|
| பிரவேசக் கட்டணம் | 3 | 0 | 0 |
| 6 - மாதங்கட்கு | 90 | 0 | 0 |
| சாதாரண வைத்தியம், விளையாட்டுக்கு | | | |
| 6 - மாதப் பகுதிக்கு | 4 | 4 | 0 |

இரவில் பால் கொடுக்க வேண்டுமானால் மாதம் 1-க்கு 3—0—0 வீதம் செலுத்த வேண்டும். பாவாடை, சட்டை, புத்தகங்கள், கைத்தொழிலுக்கு வேண்டிய சாமான்கள், முதலியன வேறு.

## மாண்டிசோரிப் பகுதி

இதில் $2\frac{1}{2}$ வயது முதல் 5-வயது வரையுள்ள ஆண் பெண் குழந்தைகள் இருந்து வருகின்றனர். இந்தப் பிள்ளைகளைப் பராமரிக்கப் பயிற்சி பெற்ற நர்ஸ், ஆயாள், உதவி ஆள் ஆகியோர் இருக்கின்றனர். வாரம் இருமுறை எண்ணை முழுக்கு உண்டு.

**உணவு விபரம்:-**

| | | |
|---|---|---|
| காலை | 8-30 | இட்லி, தோசை, கோதுமை தோசை, கேப்பை தோசை ஏதாவதொன்று; பால். |
| பகல் | 12-30 | சாதம், நெய், குழம்பு, ரசம், மோர், இரண்டு கறிகளுடன். |
| மாலை | 5-00 | இனிப்பு, காரம் ஏதாவதொரு பலகாரம், பழச் சாறு அல்லது சூப். |
| இரவு | 8-30 | சாதம், நெய், குழம்பு, ரசம், இரண்டு கறிகளுடன்; பால். |

அப்பளம், பாயசம், தயிர், வெண்ணை முதலியனவும் கொடுக்கப்படுகின்றன. பௌர்ணமி யன்றிரவு வர்க்கான்னங்களுடன் நிலா போஜனம் நடக்கும்.

**கட்டண விபரம்:-**

| | | | |
|---|---|---|---|
| பிரவேசக் கட்டணம் | 4 | 0 | 0 |
| 6 - மாதங்கட்கு | 150 | 0 | 0 |
| சாதாரண வைத்யம், விளையாட்டுக்கு | | | |
| 6 - மாதப் பகுதிக்கு | 4 | 4 | 0 |

ட்ராயர், சட்டை வகையரு வேறு.

# விளையாட்டு

படிப்பு நேரம் போக பாக்கியுள்ள நேரங்களில் விளையாடு தற்கு ஊஞ்சல், சருக்கு, பார்கள், டென்னிகாயிட், பாட்மிண் டன், கால் பந்து, சைக்கிள், ஸ்கிப்பிங் முதலிய வெளி விளை யாட்டு சாதனங்களும், காரம் போர்டு, சதுரங்கம், பள்ளாங் குழி, தாயம், வார்த்தை சேர்த்தல், வெட்டுப் படம் சேர்த்தல் போன்ற உள் விளையாட்டுகளும் உண்டு. மாஜிக்லாண்டர்ண் படக்காட்சி, கிராமபோன்களும் இருக்கின்றன. ரேடியோ வைக்கப்பட்டிருக்கிறது.

# நிபந்தனைகள்

எல்லாக் குழந்தைகட்கும் ஆறு மாதத் தவணை முன் பணம் செலுத்த வேண்டும். மறுபடி ஆருவது மாதம் முடிவ தற்கு 15-நாட்களுக்கு முன், மறு தவணைப் பணம் செலுத்த வேண்டும்.

விடுமுறை நாட்களுக்கும் லீவு எடுக்கிற நாட்களுக்கும் கட்டணம் குறைக்கவோ, வாபஸ் பெறவோ விரும்பக்கூடாது.

# அபிப்பிராயங்கள்.

சென்னை அரசாங்கக் கோர்ட் மந்திரி கனம் ராமன் மேனன் அவர்கள் :—

"மகளிர் இல்லம்" போன்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த மூலகாரணராய் இருந்தோரையும் ஆதரவளித்தோரையும் நான் போற்றுகிறேன். ஆனல் இம்மாதிரி சேவைக்குப் பெரும் உதவி தேவை. பொதுமக்கள் இவ்வியக்கத்தைப் பெரிதும் ஆதரிக்கின்றனர். ஆயினும் அதை நடத்திவரப் பெரும் பணம் அவசியமாய் இருக்கும் என்பது எனக்குத் தெரியும். இச் செட்டிமார் நாட்டில் பலரிடம் பணச் செழிப்பு இருக்கின்றது. நண்பர் முருகப்பா அவர்களும், அவர்கள் மனைவியார் ஸ்ரீமதி மரகதவல்லியார் அவர்களும் தங்கள் பூரண உழைப்பையும் அவகாசத்தையும் செலவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் அவர்கள் நேரத்தைப் பணம் சேர்ப்பதில் செலவிடாதவாறு, அப்போதைக் கப்போது பணம் வந்து குவியும்படிச் செய்ய வேண்டியது இங்குள்ள செல்வந்தர்களின் கடமையாகும். இது மாதிரி ஸ்தாபனத்திற்குப் பண முடை ஏற்பட்டது என்ற பேச்சு வரின், செட்டிமார் நாட்டிற்கும் உங்கள் சமூகத்திற்கும் அது கேவலமாயிருக்கும். நம்மிடையே பொதுஜன சேவை செய்ய ஆர்வமிக்கவர் அநேகர் உள்ளனர். உழைப்பாளிகள் மட்டு மிருந்து என்ன பிரயோஜனம்? பணமல்லவோ வேண்டும்? நமது நாட்டிலோ பொதுஜன சேவை செய்வோர் பணம் வசூலிப்பதிலேயே தங்கள் அவகாசத்தில் முக்கால் வாசிக்கு மேலாகச் செலவழிக்க வேண்டியிருக்கிறது. நமது தனவந்த நண்பர்கள் அவரவர்கள் கொடுக்கவிருக்கும் பணத்தைத் தாங்களாகவே அளித்துவிட்டால், பொதுஜன சேவை செய்வோர் இங்கும் அங்கும் அலைந்து தங்கள் பொழுதை வீணுக்க வேண்டிய அவசியம் இருக்காது. நான் இம் "மகளிர் இல்ல"த்தை மிகுந்த விருப்பத்துடன் கவனித்து வருவேன். பார்க்கப்போனல் ஒரு சிறு பண உதவியைச் செய்வதினல் நாம் நமது முன்னேர்கள் செய்த பாவச் செய்கைகளுக்குப் பரிகாரம் செய்கிருேமே தவிர வேறில்லை.

ஸ்ரீலஸ்ரீ சுவாமி விபுலாநந்தா அவர்கள் :—

குருகுல முறையில் கல்வி கற்பதே சாலச் சிறந்தது; உடல் நலத்திற்கு உகந்தது. முற்காலத்தில் ஆண்கட்கும் பெண்கட்கும் குருகுல முறையிலேயே கல்வி போதிக்கப்பட்டது. இம்முறையானது ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து மனப்பண்பு ஏற்பட ஏதுவாகிறது. அக்காலத்தில் கைத்தொழிலும் சித்திரமும் சொல்லிக் கொடுத்தார்கள். இங்கேயும் மாணவிகள் பெரிய வகுப்புக்கு வரும்போது தமிழ் மொழியினை அலங்கரிக்கின்ற இலக்கியத்தையும், கலைகளையும், விஞ்ஞானத்தையும் சொல்லித் தரலாம். திரு. முருகப்பா கற்றவர்; பத்திரிகையில் எழுதினர்; ஒவ்வொன்றுகச் செய்கையில் கொண்டு வருகிறர். சிந்தித்தலும், சொல்லுதலும் செய்கையில் வந்த பின்னரே முற்றுப் பெறும். இதனுல் பெறுகின்ற நலம் நாட்டிற்குரியது. இந்தப் பேரறத்திற்கு அனைவரும் சேர்ந்து உதவுதல் வேண்டும். ஆரம்பம் வேண்டியதுதான். ஆரம்பித்து விட்ட நிலையத்தினை பொது ஜனங்கள்தான் நடத்த வேண்டும். செல்வப் பிரபுக்களின் உதவிபெற வேண்டிய காரியம் இது. எல்லோரும் ஈடுபட்டு ஆவன செய்தல் வேண்டும். இந்த நாடு நலமடைய வேண்டுமென்கின்ற கருத்தில் நாங்கள் தொண்டு செய்கின்றேம். ஆங்காங்கு செல்கின்றேம்; பார்க்கின்றேம்; யோசனைகள் சொல்கின்றேம். ஆனுல் பொருளுதவ முடியாது. அதைச் செல்வர்கள்தான் செய்ய வேண்டும்.

**சென்னை மாகாண ஹிந்துஸ்தான் சாரண ஆர்க்கனைஸிங் கமிஷணர் திரு. வி. எஸ். ரத்னசபாபதி அவர்கள் :—**

மாண்டிசோரி கல்வி முறை போதிக்கும் ஸ்தாபனங்கள் இந்தியாவிலேயே அதிகம் கிடையா. இங்கே உண்மையான தொண்டு செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியும் ஊக்கமும் அதிகமாகப் பிரதிபலிக்கின்றன. இந்த முறை ஒரு முன்மாதிரியாகும். ஒரு தேசத்துக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தின் நிவாரண மார்க்கத்தைக் குழந்தைகளிடமிருந்து கற்றுக்கொள்ளலாம் என்று சொல்கிறர்கள். சகோதரத்வம், பிறர்க்குதவி செய்தல், உண்மை பேசுதல், பேதம் பாராட்டாமை முதலிய குணங்கள் சிசுக்களிடம் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன, அவை தானே வளரும்படி விட்டுவிட்டால் நாட்டில் ஒற்றுமை ஏற்படும். சுய நல உணர்ச்சி கொண்டு கெட்ட குணங்களை முதியோர்களே குழந்தைகளுக்குக் கற்பிக்கிறர்

கள். இயற்கையாகவே உள்ள நற்குணங்களை இயற்கையாகவே வளரச் செய்வது இந்த மாண்டிசோரி கல்வி முறை. இதற்கு இந்த ஸ்தாபனம் ஏற்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

தேவகோட்டை ஜமீந்தார் திருவாளர் அழ. அரு. ராம. வெள்ளையன் செட்டியார் அவர்கள் :—

மக்கள் வாழ்வுக்குப் பெண்கள் அறிவுடையவர்களாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். மனைவி என்றால் வீட்டுக்கு உடையவள் என்று அர்த்தம். இல்லம் என்பது பெண்களுக்கு உரியது. கல்வி சரஸ்வதி என்ற உருவத்தில் தோற்றமளிக்கிறது. எனவே, கல்வி பெண்களுக்குத் தான் முதன்மையாக அளிக்கப்பட வேண்டுமென்பதும், அவர்கள்தான் முழுப்பாத்யதை உடையவர்கள் என்பதும் இதிலிருந்து புலப்படுகிறது. பெண்கள் படித்திருந்தால் நாகரிகம் வளரும். கல்வி ஆண்மக்களுக்கு எவ்வளவு பயன்படுகிறதோ, அப்படியே பெண் மக்களுக்கும் அறிவை வளர்த்துப் பயன் தரக்கூடியது. பெண்கள் நம்மோடு பங்கெடுத்து உதவ வேண்டுமென்றால் கண்டிப்பாக அவர்களுக்குக் கல்வி அறிவு வேண்டும். இடைக்காலத்தில் பெண்கள் படிக்கக் கூடாது என்ற கருத்து இருந்தது. ஆனால், முன்னாளில் காரைக்காலம்மையார், ஆண்டாள், ஔவையார் போன்ற எத்தனையோ பெண்கள் நன்றாகப் படித்துக் கவிபாடி இருக்கிறார்கள். இப்பொழுது பெண்கள் படிக்கக் கூடாதென்று யாரும் சொல்வதில்லை. நாட்டில் தற்சமயம் பெண் கல்வியின் தேவை உணரப்படுகிறது. இந்தப் பள்ளிக்கூடத்தையும் ஹாஸ்டலையும் ஆயிரக்கணக்காகச் செலவிட்டுக் கட்டிடங்கள் கட்டி நன்றாக நடத்திவர நண்பர் முருகப்பா அவர்களும், மரகதவல்லி அம்மையாரும் ஓயாது முயன்று வருகிறார்கள். அது நல்ல பலனை அளிக்கும்படியான வளர்ச்சி யடைந்திருப்பதற்கு நான் சந்தோஷப் படுகிறேன். இந்தப் பள்ளிக்கூடமும் ஹாஸ்டலும் இன்னும் அபிவிருத்தி யடைய அனைவரும் முயற்சிக்க வேண்டும். அவை இரண்டும் மேன்மேலும் வளர்ந்தோங்கவும் பெண் குழந்தைகள் ஆயிரக் கணக்காக இதில் படித்து உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென்றும் எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

தேவகோட்டை பாங்கர் திரு. உ. மு. சுப. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் :—

குழந்தைகளைப் பெறுவதற்கு எவ்வளவோ தவம், தானம் தர்மங்கள் எல்லாம் செய்கிறார்கள். குழந்தைகள் பிறந்த பிறகு அவைகளை வளர்ப்பதும், படிக்க வைப்பதும் எவ்வளவோ சிரமமாக இருக்கிறது. பெரிய ஊர்களில் பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் அவ்வளவு சிரமமில்லை. சிறு ஊர்களில் நல்ல பள்ளிக் கூடங்கள் இல்லை. வைத்து நடத்துவதும் சுலபமாக இல்லை. பெரிய ஊர்களிலும்கூட பள்ளிக்கூட நேரம் தவிர மற்ற நேரங்களில் பிள்ளைகளைக் கவனிப்பது கஷ்டமாகவே இருந்து வருகிறது. இவைகள் எல்லாம் சீர்ப்படுவதற்குப் போர்டிங்-ஸ்கூல் முறையே சிறந்தது என்பதை மேல்நாட்டார் கருதி அத்துறையில் மிக மேம்பட்டு வளர்ந்திருக்கிறார்கள்.

ஆண் குழந்தைகளுக்குத்தான் படிப்பு அவசியம் என்று பல வருஷங்களுக்கு முன்பு நினைத்து வந்தார்கள். பெண் மக்கள் வீட்டு வேலைகளைக் கவனித்துச் செம்மையாக இருந்தால் போதும் என்ற நினைப்பு ஜனங்களுக்குள் பரவி யிருக்கிறது. வரவர நினைப்பு மாறி பெண் மக்களும் படிக்கலாம், அதனால் பாதகமில்லை என்று கருதினார்கள். இப்பொழுது, ஆணும் பெண்ணும் படிக்க வேண்டியதுதான் என்று எல்லோரும் கருதிவிட்டார்கள். இப்பொழுது எங்கும் பெண் குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குக் கூட்டங் கூட்டமாகப் போய் வருவதை நாம் பார்க்கிறோம்.

பெண் மக்கள் படிப்பு உயரவேண்டுமானால் போர்டிங் ஸ்கூல்களில் சேர்ந்து படிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். படித்துத் தேறிய பெண்களில் சிலர் உபாத்தியாயர்களாகவும், டாக்டர்களாகவும், நர்சுகளாகவும் இருந்து உத்யோகம் செய்து நிறைந்த புண்ணியத்தையும் பொருளையும் சம்பாதிக்கிறார்கள். இந்து சமூகப் பெண்கள் உயர்தரப் படிப்புக்களைப் படித்து சமூக சேவைகளில் முற்பட்டால் இந்து மதப் பெண்களின் செய்கையும் கௌரவமும் மிக மேம்படுமென்பதில் சந்தேகமில்லை.

இந்த "மகளிர் இல்லம் பெண் பாடசாலை" தொடங்கி இரண்டு வருஷங்கள் பூர்த்தியாகி விட்டன. இரண்டு வருஷங்களுக்கு முன்பு மிகவும் பயங்கரமான காடாக இருந்த இந்த

இடமானது நமது மாரகதவல்லி, முருகப்பா அவர்கள் பெரு முயற்சியாலும் விடா உழைப்பினாலும் இன்று ஒரு சிறந்த கிராமமாகவும் பாடசாலையாகவும் விளங்குகிறது. பள்ளிக் கூடத்தோடு போர்டிங் ஏற்பாடும் அமைந்திருக்கிறது. அதிலும் பல ஊர்ப் பெண்கள் படித்து வருகிறார்கள்.

மாண்டிசோரி வகுப்பு இங்கேயே நடைபெற்று வருவது ஒரு முக்கியமான விஷயம். இது இப்பகுதியில் ஒரு பெரிய கவர்ச்சியை உண்டு பண்ணி இருக்கிறது. இரண்டரை வயது முதல் ஐந்து வயது வரை உள்ள பிள்ளைகளை இந்த வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இவ்வளவு சிறு குழந்தைகள் தாய் தந்தையரிட மிருந்து பிரிந்து வந்து இங்கே சந்தோஷமாக விளையாடிக் கொண்டு பள்ளிக்கூடமும் படிக்கிறது என்றால் இது மிகவும் ஆச்சரியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவைகளைப் பார்க்கும்போது படிப்பு என்பதும், அறிவு வளர்ச்சி என்பதும் முறையோடு சொல்லிக் கொடுக்கப்படு மானால் வயதைப்பற்றிக் கணக்கில்லை என்று தெரிகிறது. ஒன் றிரண்டு குழந்தைகளை வைத்துப் பரிபாலிப்பதே ஒவ்வொரு குடும்பத்திலும் பெரும் கஷ்டமாக இருக்கும்போது, பல சிறு குழந்தைகளை வைத்துப் பரிபாலிப்பதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. இவ்வளவு பெரிய பொறுப்பான காரியத்தைத் தொடங்கி மிகவும் திறமையாக நடத்தி வருகிற நமது முருகப்பா அவர்களையும் மரகதவல்லியார் அவர்களையும் யாரும் போற்றிப் புகழாமல் இருக்க முடியாது. இவ்விஷயத்தில் நம்மவர்கள் அவரவர்களால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்ய வேண்டுமென்று நான் மிகவும் தாழ்மை யுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

செட்டிநாடு ராஜா டாக்டர் சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் :—

இவர்கள் செய்துவரும் பொதுநலத் தொண்டுகளில் சிறந்து விளங்குவது நம் நாட்டுச் சிறுமியர் கல்விக்காக இங்கே அமைக்கப்பட்டுள்ள "மகளிர் இல்ல"மே யாகும். கோடிக் கணக்கான சிறுவர் சிறுமியர் கல்விப் பயிற்சி பெற வேண்டிய நமது தேசத்தில் இது போன்ற இல்லங்கள் எவ்வளவு ஏற்பட் டாலும் அதிகமென்று சொல்வதற்கில்லை. திரு. முருகப்பா அவர்கள் இந்த இல்லத்தை ஸ்தாபித்து இதன் அபிவிருத்தியில் தமது முழு கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள் என்பது

மிகையல்ல. இதன் ஸ்தாபனத்திற்காக பல அன்பர்களிட மிருந்து நன்கொடைகள் சேர்த்தது மல்லாமல் தாமே இருபத் தையாயிரம் ரூபாய் கொடுத்து இளைஞர் கல்விக்காகத் தொண்டு செய்ய முன்வந்தது மிகவும் போற்றத் தக்கதாகும், நான் அறிந்த அளவில் திரு. முருகப்பா அவர்கள் பெரிய தனவந் தரல்ல. தாமே இருபத்தையாயிரம் ரூபாய் கொடுத்தது பதின் மடங்கு மதிப்புடையதாகும். இத்தகைய பெருந் தொகையை அவர்கள் மனமுவந்து கொடுத்திருப்பதற்குப் பெண்குலத்தை மேன்மையுறச் செய்ய வேண்டு மென்ற பேரவா ஒன்றே காரண மாகும். இவர்களுடைய இந்த முயற்சிக்கு மிகவும் அனுகூல மாக ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருபவர்களில், இவர் களுடைய வாழ்க்கைத் துணைவியாக அமைந்த ஸ்ரீமதி மரகத வல்லியம்மாள் அவர்கள் முதன்மையானவர்கள் என்பது பெருமை தரத்தக்கது. இந்த மகளிர் இல்லம் அமையப் பெற்றிருக்கும் இடம் கல்வி வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் ஏற்றதாக விருக்கிறது.

சிறுவர் சிறுமியர் நாட்டின் செல்வமாகையால் அவர்க ளுடைய கல்வித் தேர்ச்சியை சிரத்தையுடன் கவனிப்பது அறி வாளிகளுடைய கடமையாகும். இளைஞர்களுடைய மனோ தத்துவம் அறிந்து பாடங்களைக் கற்பிக்க மேனாடுகளில் பல அறிவாளிகள் சிறந்த முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். அவர்களில் ஒருவராகிய இத்தாலி தேசத்து மாண்டிசோரி அம்மையார் இப்பொழுது நமது தேசத்தில் வசித்து வருகிறார் கள். அவர்கள் பாலர் கல்வியைப் போதிப்பதில் விசேஷத் திறமையும் அனுபவமும் பெற்றவர்கள். அவர்களுடைய முறையில் பயிற்சி பெற்ற உபாத்தியாயினி ஒருவர் இந்த "மகளிர் இல்லத்"தில் இளஞ் சிறுவர்களின் மனப்பான்மைக்கு ஏற்றவிதமாக, அன்பும் அறிவும் பெருகும் முறையில் கல்வி கற்பித்து வருவது குறிப்பிடத்தக்கது.

நமது தனவணிக தனவான்களில் இன்னும் பலர் இவ் வில்லத்திற்குப் பொருளுதவி செய்ய முன் வருவார்களானால் இந்தக் கல்வி ஸ்தாபனம் பெரிதும் நன்மை யடைந்து பெண் மக்களின் கல்வியை விருத்தி செய்யும் ஒரு சிறந்த கலாசாலையாக விளங்கு மென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

காணடுகோத்தான் ராவ்பகதூர் திரு. க. வே. சித. வேங்கிடாசலம் செட்டியார் அவர்கள் :—

இரண்டரை வயதுச் சிறு குழந்தை வீட்டிலிருந்தால் அதனால் தாய் தந்தையர் படும் சிரமம் எல்லோருக்கும் தெரியும். இரண்டு குழந்தைகள் இருந்துவிட்டால் வீட்டில் ஓயாச் சண்டைதான். இவ்வளவு சிறு பிராயத்தில் பள்ளியில் சேர்த்து இவ்வாறு படிப்பிப்பது மிகவும் சிலாக்கியமான காரியம். வீட்டிலிருந்தால் இவ்வளவு சிறு பிள்ளைகளிடம், 'அப்பா பேர் என்ன?' என்றால்: 'அப்பா பேரா, அப்பா!' என்று சொல்லும். இங்கே இவ்வளவு பெரிய கூட்டத்தில் பேரும் ஊரும் சொல்லுகின்றனர். வீட்டிலிருந்தால் பள்ளிக் கூடத்தில் வைத்த பிறகுதான் படிக்க வேண்டும். அதற்கும் பாட்டி வீட்டிலிருந்து விடவேண்டும்! ஆகையால் குழந்தைகளை இம்மாதிரிப் பள்ளிக்கூடத்தில் சிறு பிராயத்திலேயே விட்டு விடுவது நல்லது என்பதை நிதர்சனமாகக் கண்டு கொண்டோம். நல்ல முறையில் நடக்கும் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்தால் படிப்பதற்கு மிகச் சௌகரியமாய் இருக்கும். இந்த இடம் காரைக்குடியிலிருந்து தேவகோட்டைக்குப் போகும் வழியில் இருக்கிறது. யாரும் பிள்ளைகளைப் பார்த்துப் போவதில் சிரமமில்லை. பெற்றோருக்கு வரமுடியாத போது இந்த வழியில் செல்பவரிடம் 'எங்கள் பிள்ளையைப் பார்த்து வாருங்கள்' என்று சொல்லிவிடலாம். வசதியும் சௌகரியமுமான இடம். நல்ல காற்று தண்ணீர் இடவசதிகளும் இருக்கின்றன. முருகப்பா அவர்கள் தம் ஐஸ்வரியம் முழுவதையும் உழைப்பையும் இதில் ஒப்புவித்து நன்றாக நடத்தி வருகிறார்கள். யாருக்கும் இதில் ஆட்சேபம் இருக்க முடியாது. இங்கே எல்லா வகுப்புப் பிள்ளைகளும் சமமாக நடத்தப்படுகின்றனர். இது மிகவும் போற்றத்தக்கது. அவர்கள் சொன்னாலன்றி எந்தக் குழந்தை எந்த வகுப்பைச் சேர்ந்தது என்று அறிய முடியாதபடி அவ்வளவு அழகாகச் செய்திருக்கிறார்கள். மிக வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இந்தச் சிறு குழந்தைகளைத் தாய் தந்தையரைவிட அதிகப் பிரீதியுடனும் அன்புடனும் பரிபாலித்து வருகிறார்கள்.

திருவனந்தபுரம் திரு. சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார் அவர்கள் M. A. B. L. :—

*9—4—41.*

நண்பர்களுடன் இன்று மாலை "மகளிர் இல்லத்"தைப் பார்வையிடும் பேறு கிடைத்தது. மாண்டிசோரி முறையில் சிறு குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதைப் பார்த்து அளவிலா மகிழ்ச்சி யடைந்தோம். கோலாட்டம் மிக இனிமையாக இருந்தது. காகிதம் மிக எளிதாகச் செய்யப்படுவதைப் பார்க்கக் குடிசைக் கைத்தொழிலுக்கு நற்காலம் வந்துகொண்டிருக்கிறது. என்பதை அறிய முடிந்தது. "மகளிர் இல்லம்" அமைக்கப்பட்டிருக்கும் இடம் மிக அருமையானது. மாணவிகள் மாலையில் விளையாடு வதற்கு மிக நன்ருக தோட்டங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாணவிகள் சில வருடங்கள் தங்கி இருப்பார்களானல் அவர்கள் இந்த இடத்தை விட்டுச் செல்லும்போது நல்ல உடல் நலம் பெற்று வெளியே போவார்கள் என்பதற்குச் சற்றும் ஐயமில்லை. மாண்டிசோரி முறையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் அவரது வேலைக்கு நல்ல தகுதி வாய்ந்தவர் என்பது தெரிகிறது. மரகதவல்லியார் இந்த இல்லத்தின் மேம்பாட்டுக்காகச் செய்து வரும் அரும் பெருஞ் செயல்கள் மிகவும் பாராட்டற்பாலன. "மகளிர் இல்லம்" தமிழ் நாட்டிற்கே ஒரு வழிகாட்டியாக இருப்பதாக!

அண்ணுமலை சர்வகலாசாலை விரிவுரையாளர் திரு. ஜி. சுப்பிரமணியம் அவர்கள் M. A. B. L. :—

*9—4—41.*

இல்லம் என்ருலே மகளிருடைய இல்லமாகத்தானே இருக்க வேண்டும்? அது தெரிந்து தான் "மகளிர் இல்லம்" என்று பெயர் அமைத்தனர் போலும். உள் சென்று கண்டு களித்தேன். கன்னிப் பெண்கள் இள நாவில் கம்பன் கவிதைகளிநடம் புரியக் கண்டேன். கையாலே தாளம், வாயாலே பாட்டு. அதற்கேற்ற ஆட்டம். ஒரே ஆனந்தம். கல்வியும் செல்வமும் பூத்துவிட்டன என்றே மகிழ்ந்தேன். மேல் நாட்டுக்கு அமைக்கப்பட்ட "மாண்டிசோரி" முறையை யாதொரு சிரமமுமின்றி நம் தமிழ்க் குழந்தைகளுக்கும் அமைத்து நன்கு பயன் எய்தலாம் என்பதை இங்கு ஐயந்திரிபு இன்றி இன்று கண்டு கொண்டேன். நாவொடு நவிலா நகைபடு

தீஞ்சொற்களையுடைய பாலருவாயரான செல்வச் சிறுர்கள் எல்லாம் இங்குக் குறள் பாட மோதியும், கம்பர் ரஸிகர் களாகவும், பெரிய கணித மேதாவிகளாகவும் விளங்குகிறுர்கள் என்றுல் வேறு என் சொல்வது! குழந்தைகளே நமக்கு வழிகாட்டும் தீபம். இதை உணர்ந்த இம் "மகளிர் இல்லம்" நிர்வாகிகளுக்கு என் வந்தனம்.

**திருநெல்வேலி தாசில்தார், திரு. தோ. மு. பாஸ்கரத் தோண்டமான் அவர்கள் B A.:—**

*9—4—41.*

இன்று "மகளிர் இல்லத்"தைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. இளஞ் சிறுவர்களைப் பயிற்றும் Montessori Method-மிகவும் அருமையாக இருந்தது. சின்னஞ் சிறு பிள்ளைகள் உத்ஸாகமாகக் கல்வி கற்கிற முறை போற்றத் தகுந் ததாய் இருந்தது. இதை யெல்லாம்விட, பெண்கள் கம்பன் பாக்களைக், கும்மியாகவும் கோலாட்டமாகவும் பாடிக் காட்டி யது மிகவும் ரஸமாய் இருந்தது. இத்தகைய முறையில் கம்பன் பாக்களைப் பயிற்றுவிப்பது, மரகதவல்லியார் செய்யும் சிறந்த தொண்டென நான் கருதுகிறேன். இத்துடன் பெண்கள் காகிதம் செய்கிறுர்கள். இனிக் காடு வளர்ப்பார்கள். "மகளிர் இல்லம்" பல நலன்களை எய்த வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**சென்னை சர்வகலாசாலை திரு. மு. அருணசலம் M. A.:—**

*9—4—41.*

பல நண்பர்களோடு இந்த "மகளிர் இல்லத்"தைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. பலரும் கம்பன் புகழைப் பாடுவார்கள். கதையைச் சொல்வார்கள். ஆனுல் தங்கள் செயலிலே கம்பன் காவியத்தைச் சுவைக்கும் முறை எதுவும் கைக் கொள்வதில்லை. இப்படிப்பட்ட உலகத்திலே இந்த இல்லத்தில் கண்ட சில காட்சிகள் கண்ணுக்கும் காதுக்கும் பெரிய விருந்தாயிருந்தன. சிறு பெண்கள் பல அரிய கம்ப ராமாயணப் பாடல்களைப் பாடிக் கும்மியடித்தார்கள்; கோலாட் டம் ஆடினுர்கள். அருமையான விருத்தப் பாட்டுகள் தாளங் களுக்கு ஒத்து ஒலித்தபோது, இதுவே கம்பன் பாடல்களைப் பாடும் முறை என்று உணர முடிந்தது. இத்தகைய அரிய காரியங்களைச் செய்த இல்லத்தார் எல்லா நலன்களும் பெற்றுச் சிறக்க.

மதுரைக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் வித்வான் பண்டிட் T. இராமாநுஜன் அவர்கள்:—

*10—4—41.*

இவ் வில்லத்தைப் பார்க்க வேண்டிய வேணவாவினுல் யானே விசாரித்துச் சென்றேன். ஒரே அபிப்பிராயம் தான் எனக்கு அதைப்பற்றி; கேவலம், மகளிர் இல்லம் என்பது மட்டுமல்ல; அன்பு நிலையம் அது; களிப்பின் குடிநிலம் அது; சமத்துவ உறையுள் அது. தமிழ் நாட்டில் வருங்காலத்தில் சமத்துவ சகோதர நிலையம்—அதற்குப் பயிலும் இடம்—ஒன்று கால ரீதியால் ஏற்பட்டால் தான் கதி நிலே யுண்டு என்பது உலகறிந்த உண்மையாகுமானுல், அது இதுவாகத்தான் இருக்கும் என்பது எனது உண்மையான கருத்து. சுமார் நான்கு வயதிற்கு மேற்படாத குழந்தை இராமாயண கதா பாகத்தை நன்கு அறிந்து அதுபற்றித் தனது சொந்த அபிப்பிராயத்தையும் உணர்ச்சி வேகத்துடன் உரைக்கும் தன்மையையும் பெற்றிருப்பதைப் பல்லாண்டுகள் படித்துப் பட்டம்பெற்ற நான் கண்டேன் என்பது நிஜமானுல் இயற்கையோடு இயந்த கல்விமுறை அங்கு நடைபெற்று வருவது என்பதுபற்றிச் சிறிதும் ஐயமில்லே. கலாநிலயம் அது. காட்சி நிலயம். தமிழபிமானிகள் யாவரும் வந்து பார்த்துப் போகவேண்டிய யாத்திரைக் காட்சிப் பொருள் ஒன்றே இந்நிலயம்.

திருநெல்வேலி ஹிந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. கு. அருணுசலக் கவுண்டர் அவர்கள்:—

*10—4—41.*

"மகளிர் இல்லத்" துக்கு நான் போயிருந்த போது எனது உணர்ச்சி, "நான் ஒரு குழந்தையாய் இருந்திருக்கக் கூடாதா? என்பதே.

திருவனந்தபுரம் திரு. K. N. குமரேசபிள்ளை அவர்கள்:—

*10—4—41.*

"மகளிர் இல்லம்" சென்று பார்த்து மகிழ்ச்சி யடைந்தோம். பாடசாலேக்கு வேண்டிய சகல வசதிகளும் நிறைந்த ஓரிடத்தில் மிக்க பொருட் செலவின் பேரில் கட்டப்பட்டிருக்கிற அழகிய கட்டிடங்களையும் சுற்றிப் பார்த்தோம். நண்பர்

முருகப்பரும், அவர் மனைவியார் மாகதவல்லி அம்மையாரும் மிகுந்த தியாக புத்தியுடனும் திறமையுடனும் நடத்திவருகிற இந்த ஸ்தாபனத்தைப் பார்த்தவுடன் அதிசயமடைந்தேன். பாடசாலையிலுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் அப்பொழுது பாடிய பாட்டுக்களும் ஆட்டங்களும் எனது மனத்தைக் கவர்ந்தன. இப் பெண்பாடசாலையானது பொதுமக்களின் ஆதரவையும் பிரபுக்களின் பொருளுதவியையும் வேண்டிய மட்டும் பெற்று என்றும் நிலவுதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக!

**இண்டர் நாஷனல் மாண்டிசோரி அசோஸியேஷன்:—**

*15—3—42.*

இந்தியாவிலே மிக முற்போக்கான வர்த்தக சமூகத்தினிடையே பிரகாசிப்பதால், இந்த ஸ்கூல் மிகுந்த வெற்றியை அடையும் என்று எதிர்பார்க்கிறோம். ஏனெனில் இந்தப் பகுதியில் வெற்றிக்குக் குறுக்கே நிற்பது பணக் கஷ்டந்தான். புத்திசாலிகள் நிரம்ப இருக்கின்றனர். ஆனால், பணத்திற்கே வழி குறைவு. இந்தப் பகுதியிலே பணக்கஷ்டம் என்ற தடையில்லாததால் வெற்றி பெறுவதில் வேறு எந்தத் தடையும் குறுக்கிடுவதற்கில்லை.

**மகாமகோபாத்யாய பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் :—**

*15—3—42.*

சிறு பருவத்துக் குழந்தைகளை உடல் நலமும் அறிவு வளர்ச்சியும் கருதிப் பாதுகாத்தற்கு எழுந்த மாண்டிசோரி ஸ்கூல் நம் நகரத்தார் நாட்டிற்குப் புதிய தோற்றமாகும். இதன் நோக்கம் எதிர்காலத்து மக்களின் வாழ்க்கைக்குச் சிறந்த பயன் விளைப்பதாகும்.

**சிதம்பரம் திரு. ரா. விநாயகம் அவர்கள் :—**

*31—3—42.*

"மகளிர் இல்லத்"திற்கு வந்து முருகப்பா மரகதவல்லியம்மாள் இருவருடைய அரிய சேவையை நேரில் பார்த்து மகிழ்ந்தேன். இயற்கையையே ஒட்டி, குழந்தைகளுக்கு அலுப்பு ஊட்டாமல் அறிவை ஊட்டும் புதுமுறைக் கல்வி தமிழ்

நாட்டிற்கு வந்துவிட்டது தமிழரின் அதிர்ஷ்டம். நம் குழந்தைகளுக்கெல்லாம் யோகம். பெண் பிள்ளைகளின் கோலாட்டங்களைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தேன். நல்ல கவிகளைத் தாளத்தில் வைத்து அமைத்துக் கேட்போருக்கு ஆனந்தம் ஏற்படும் வகையில் சகோதரி மரகதவல்லியம்மாள் பெண்களுக்குக் கோலாட்டம் கற்பிக்கிறார்கள். இவைதான் நிர்மாண வேலை. இவைதான் நாட்டிற்கு உண்மையான சேவை. இத்தகைய ஸ்தாபனங்கள் தமிழ் நாட்டில் பெருக வேண்டும்.

சென்னை லயோலா காலேஜ் தமிழாசிரியர் திரு. கு. மதுரை முதலியார் அவர்கள் :—

*31—3—1942.*

"மகளிர் இல்லத்"திற்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த என் அருமை நண்பர் முருகப்பா அவர்கள் மகளிர் இல்லத்தைத் தம் மில்லமெனவே மிக மகிழ்ந்து தம் நாட்களைப் பேரின்பத்துடன் கழித்து வரும் குழந்தைகளின் நுண்ணறிவைப் பற்றிப் பல செய்திகள் கூறினர். அவற்றை யெல்லாம் கேட்டு மிக மகிழ்ந்தேன். பின்னர் அங்கிருந்த குழந்தைகளை யெல்லாம் நேரிற் கண்டு உரையாடும் பேறு பெற்றேன். அக்குழந்தைகள் திருக்குறள், கம்பராமாயணம் சிலப்பதிகாரம் முதலிய நன்னூல்களின் நன்மணிகள் எனத் திகழும் சீரிய பாக்களைப் பாடி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டார்கள். அங்குக் குழந்தைகளைப் பயிற்றும் முறை நேரில் கண்டு களித்தற்குரியதே யன்றி ஏட்டில் எழுத முடியாத தொன்று. நன்னெறியிற் குழந்தைகளை வளர்க்க வேண்டுமென்று விரும்பும் பெற்றோர் மகளிர் இல்லத்துக்கு ஒருமுறை செல்ல வேண்டு மென்பது எனது விருப்பம்.

மேலைச்சிவபுரி ஸ்ரீகணேசர் ஓரியண்டல் காலேஜ் பிரின்ஸ்பால் திரு. P. A. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M. A. அவர்கள் :—

*29—3—42.*

இயேசுநாதர் குழந்தைகளைப்பற்றி "of such is the Kingdom of god"—என்று குறித்திருப்பது என் நினைவுக்கு

வருகிறது. "உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதினும் அச்சமுறுத ஆண்மை, தனக்கென ஒன்று பேணித் தனிமையில் அனுபவியாமை, இயற்கையுணர்ச்சி யிழுப்பி லியைதல், ஈடிலா இசைவழி இலக்கியத் தழுந்தல் முதலிய இன்னோன்ன எழிலார் இயல்புகளை இளந்தளிரன்ன கள்ளமற்ற உள்ளம் விள்ளாவாறு கன்னலினினிய மொழி கொண்டும் கருத் துவக்கும் செயலாலும் இளஞ் செல்வங்களைப் போற்றிப் பயிற்றுவிக்கும் சொ. முருகப்பா, அன்னார் துணைவியார் ஆகிய இருவரும் போற்றற் குரியர். சிறந்த இலக்கியச் சுவை மலிந்த செய்யுட்களை, ஆசிரியன் உளக்கிடக்கை வெளித் தோன்ற இசைத்தும், நடித்தும் மூவாண்டுமுதல் பத்தாண்டிறுதியுட் பட்ட பச்சிளங் குழவிகள் எமக்கு இன்பூட்டினர். நான் இதற்கு முன் பல முறை "வந்தே மாதரம்" என்னும் பாட்டைப் பலர் பாடக் கேட்டிருந்தும், இங்குக் கேட்ட காலத்து என் உளத் துதித்த உணர்ச்சியை என்றும் அடைந்தேனில்லை. இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை. காகிதம் இயற்றல் போன்ற கைத்தொழில் முறைகளும் இப்பிள்ளைகளுக்குப் பயிற்றப்படுகின்றன. இம் "மகளிர் இல்லத்"திலும் மாண்டி சோரி வகுப்பிலும் இருந்த இரண்டரை மணி நேரத்து அனு பவத்தை நான் என்றும் மறக்க இயலாது. வீரமுடன் விளம்பும் வீரபாண்டியன் முதலாய இளம் வீரர்கள் நம் நாட்டில் பல்க இவ்வில்லம் ஏற்ற இடம். பெற்றோரினும் பரி வுடன் பிள்ளைகளைப் போற்றும் இவர்களது நிலையை நேரிற் சென்று கண்டு தங் குழவிகளை, தக்காரிவரெனக் கொண்டு, இவண் சேர்க்க!

சென்னை திருமதி "குகப்பிரியை" அவர்கள் :—

*30—3—42.*

"பெண்மை வாழ்க என்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்க என்று கூத்திடு வோமடா!

என்றார் பாரதி. ஆனால் பெண்கள் வெற்றிக்கு ஒரு சிறந்த அறிகுறியாக திருமதி மரகதவல்லியார் அவர்களால் நடத்தப் பெறும் "மகளிர் இல்லத்"தை நானும் என் துணைவரும் சென்று

பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. மாண்டிசோரி முறைப் பயிற்சி மிகச் சிறந்த முறையில் போதிக்கப்படுகின்றது. காகிதம் செய்யும் பகுதியும், நூற்றல் முதலியவைகளையும் மிகவும் அழகாகக் கற்பித்திருக்கிருர்கள். இவற்றிற் கெல்லாம் மேலாகக் கம்பனது அமுதினும் இனிய காவியத்தையும் பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை முதலிய புதுமைக் கவிஞர்களது கவிதைகளையும் அழகுபெற இசையில் அமைத்து கும்மியும் கோலாட்டமுமாக நடித்தது எல்லோருடைய கருத்தையும் கண்களையும் கவர்ந்து ஆனந்தக் கடலுள் ஆழ்த்திவிட்டது. உண்மையைச் சொல்ல வேண்டுமானுல் இதைக் காணும் ஒவ்வொருவருக்கும், 'நாமும் குழந்தையாகி இங்கே வந்து கல்வி பயில வேண்டும்' என்கிற ஆவலை யூட்டும் என்பது நிச்சயம். இந்த மகளிர் இல்லம் மேன்மேலும் பொங்கிப் பெருகிப் பெருவாழ்வு வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

புத்தேரி கவிமணி எஸ். தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்:—

*16—6—118.*

தென்னுட்டில் மாண்டிசோரி முறைப்படி கல்வி கற்பிப்பதற்கான ஒரு ஸ்தாபனம் முதல் முதலாக ஏற்படுத்திய பெருமை திரு. முருகப்பாவிற்கே உரியதாம். மகளிர் இல்லத்தை நான் ஒரு தெய்விகக் கோயிலாகவே மதிக்கிறேன். அதில் தங்கும் சின்னஞ் சிறு செல்வக் குழந்தைகளே கண்கண்ட தெய்வங்களாம். அங்குள்ள ஆசிரியர்களே உண்மையான அர்ச்சகர்கள். அந்த இல்லத்தைப் பரிபாலித்து வரும் ஸ்ரீமான் முருகப்பா அவர்களும் அவர்கள் மனைவியார் ஸ்ரீமதி மரகதவல்லியுமே அன்பு நிறைந்த தர்ம கர்த்தாக்கள்.

புதுச்சேரி ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் திரு. பி. கோதண்டராமன் M. A. B. L. அவர்கள் :—

*29—1—43.*

வருங்காலத்தில் நமது தமிழ் நாட்டில் ஒளி வீசப் போகும் மணிகளைச் சீரிய முறையில் வளர்த்துப் பல கலைகளி

லும் பயிற்றுவித்து ஆடம்பரமின்றி அரும்பணி ஆற்றிவரும் திருமதி மரகதவல்லியம்மையார் அவர்களுக்கும் திரு. முருகப்பா அவர்களுக்கும் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

**காரைக்குடி ஸ்ரீ மீனுட்சி உயர்தரப் பெண்பாடசாலைத் தலைமை ஆசிரியை திரு. T. L. சுபத்ரா தேவி B. A. L. T. அவர்கள் :—**

*8—12—43*

"மகளிர் இல்லத்"தை ஒரு அன்பு நிலையம், அற நிலையம், ஜோதி நிலையம் எனின் மிகையாகாது என்பதே எங்களது கருத்து; தமிழ் மணம் கமழும் கலைக்கூடமும், பாரத சமுதாய வாழ்விற்கு எதிர்காலத்தில் சிறப்பை நல்க அடிப்படையும் இன்ப நிலையமும் அதுவாகும். அங்குள்ள சிறு குழந்தைகளது மதி வதனங்கள் அன்றலர்ந்த செந்தாமரைகளையும் தோற்கடிக்கும் தன்மை வாய்ந்திருந்தன. அவர்களது முகத்தில் ஆனந்தமும் அருளும் ஒருங்கு சேர்ந்து களிநடம்புரியக் கண்டோம். மாண்டிசோரிக் கலை நிலையத்தில் ஆனந்த தேவதையும் அன்பு தேவதையும் நர்த்தனம் செய்யக் கண்டோம். மற்றும் "அறிவு" என்னும் இனிய அமுதை விளையாட்டுகள் மூலம் யாழினும் இனிய மழலைச் சொல் மாருக் குழந்தைகளுக்கும் இதர மாணவிகளுக்கும், புகட்டுவதை நாங்கள் கண்கூடாகக் கண்டோம். இம்மாட்சியுள்ள இல்லத்தின்கண் உள்ள ஒவ்வொருவரும் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதை நோக்குச் சொல்லாக் கொண்டனர் போலும். பெண்களது பாடசாலையின்கண்ணுள்ள மாணவிகள் தமிழ் மணம் கமழும் கம்பன் கவிகளையும், சிந்தையைக் கவரும் சிலப்பதிகாரச் செய்யுட்களையும், பார்புகழ் பாரதி பாக்களையும் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் குறள்களையும் இன்னிசை யெழுப்பிப் பாடுங்கால் நாங்கள் அனுபவித்த இன்பம் வார்த்தைகளால் எழுதுந்தரமன்று. மற்றும் அங்குள்ள ஆசிரியர்களது தமிழ்ப் பற்றும் உயரிய இலட்சியங்களும் ஆற்றலும் போற்றத் தக்கனவே. மாணவிகளுக்கு மேனுட்டு உயர்தர முறைகளைக் கையாண்டு படங்காட்டும் கருவிகள் முதலிய ஏனைய சாதனங்களால் கல்வியைப் பயிற்றுவிப்பது புகழ்ச்சிக்குரியதாகும்.

நிற்க, அங்கிலேயத்தின் தலைவர்களாகிய திருவாளர் சொ. முருகப்பா அவர்களும், திருவாட்டி மரகதவல்லியம்மாள் அவர்களும் சிறந்த சேவையிலே ஈடுபட்டுள்ளார்கள். நம் தமிழன்னைக்கு முடிசூட்ட முனைந்துவரும் அன்னவர்களது தமிழ்ப் பற்றும் பெண்களது முன்னேற்றத்தில் காட்டும் அவர்களது குன்று உழைப்பும் போற்றத் தக்கனவாகும்.

சென்னை 'நவசக்தி' ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தரனார்:—

31—12—43.

காரைக்குடி 'இந்து மதாபிமான சங்கத்'தின் ஓராண்டு விழாவில் (1919) தலைமை தாங்க என்னை முதன் முதல் அழைத்தவர் திரு. சொ. முருகப்பா அவர்கள். அவ்வழைப்பு செட்டிநாட்டின் உறவை என்னுள் படிவித்தது. அவ்வுறவு பலவழியிலும் பெருகியது. 'செட்டிநாடு' என்னும் நினைவு தோன்றும் போதெல்லாம் முதலில் காட்சியளிப்பது முருகப்பர் வடிவமாகவே இருக்கும். நண்பர் முருகப்பா அவர்களால் செட்டிநாடு ஏதோ ஒருவிதப் பெருநலன் அடையப் போகிறது என்று யான் அடிக்கடி நினைப்பதுண்டு. அந்நினைவு முருகப்பர் வாயிலாகச் சைவத்தொண்டைக் கண்டது; 'குமரன்' தமிழ்த்தாளைக் கண்டது; சீர்திருத்த இயக்கத்தைக் கண்டது. என் னெஞ்சம் ஓரோ வழி நிறைவு கொண்டது.

1944-ம் ஆண்டுத் தொடக்கத்தில் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தின் வெள்ளி விழாவில் தலைமை வகிக்கும் பணி எனக்கு நல்கப்பட்டது. அப்பணியினிடைப் பழைய தோழர் முருகப்பாவின் இல்லம் போதரும் பேறு கிடைத்தது. அப்பேறு எனக்கு உள்ள நிறைவாயிற்று. முருகப்பர் வாயிலாக எத்தொண்டு நிறைவேறுதல் வேண்டுமென்று என்னுள்ளம் பன்னெடுநாள் நினைந்து நினைந்து நிலைத்ததோ அந்நினைவில் அத்தொண்டு பருமை யடைந்து 'மாண்டிசோரி'ப் பள்ளியாகப் பரிணமித்திருத்தல் கண்டேன். குழந்தைகளின் உணர்வில் இயல்பாக ஒன்றியுள்ள தெய்விகம் முருகப்பர் மூலமாக

வெளிவரும் காட்சி கண்டு வரம்பிலா இறும்பூதெய்தினேன். குழந்தைகளின் கடவுள் தன்மை புலனுயிற்று.

அன்பர் முருகப்பாவுக்கும் மரகதவல்லிக்கும் பிறந்த வீரபாண்டியன் என்னும் ஒரு குழந்தையைப் பார்த்தேன். அக்குழந்தையின் வயது ஐந்து. ஐந்துவயதுக் குழந்தையினிடம் அரும்பிவரும் ஆடலும் பாடலும் அமிழ்த உரையும் பிறவும் திருஞானசம்பந்தரை நினைக்கச் செய்தன. பல திருஞான சம்பந்தர் முருகப்பரின் அறப்பள்ளியில் தோற்றமுற வேண்டு மென்பது எனது வேட்கை.

தமிழ்நாடு இன்று வேட்டு நிற்பது எது? விடுதலை. விடுதலைக்குரிய துறைகள் பல. அவைகளில் விழுமியது கலைத் துறை. கலைத்துறைகளிற் சிறந்தன இயல், இசை, நாடகம், என்பன. இம்மூன்றும் வளர்ந்து தமிழ்-நாட்டிற்கு விடுதலை அளிக்கவல்ல ஒரு பெரும் நெறியில் நின்று தொண்டாற்ற முன் வந்துள்ள பழைய நண்பர் முருகப்பாவுக்கும் அவர்தம் மனைவியார்க்கும் எனது வாழ்த்து உரியதாக. அவர்தம் தொண்டு மேன்மேலும் ஓங்கிவளர்ந்து மதர்த்து எக்கழுத்தம் பெற எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்வானுக.

தமிழ் நாடு வாழ்க; தமிழ்க்கலை வெல்க; முருகப்பர் முயற்சி ஓங்குக; அவர்தம் பள்ளி நலம் பெறுக; சிவனருள் பெருக.

ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் B. A. B. L. அவர்கள் :—

*17—1—44.*

சொ. முருகப்பா — மரகதவல்லி அம்மையார் சுகமாக இருக்கிறவர்கள் அல்ல; சும்மாவும் இருக்கிறவர்கள் அல்ல. சென்ற ஒரு வியாழ வட்டமாக சமுதாயம் மேம்படுவதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தவர்கள். அவர்களது ஆத்திரந்தான் எழுபத்

தைந்து ஏக்கர் காட்டை — முள்ளும் கல்லுமான காட்டை — வளைத்தது. அதில் ஒரு பகுதியைப் பண்படுத்தி அழகான கட்டிடங்களை விஸ்தாரமான இடைவெளிகளோடு அமைத்து மகளிருக்கான விடுதி, பள்ளிக்கூடம் எல்லாம் ஏற்படுத்தி வருகிறார்கள். இதெல்லாம் போகச் சின்னஞ் சிறு குழந்தைகளுக்காக மாண்டிசோரிப் பள்ளிக்கூடம் ஒன்றும் வெகு நல்ல முறையில் அமைத்திருக்கிறார்கள். படிப்பு உணவு வாழ்க்கை எல்லாம் உயர்ந்த லக்ஷியங்களோடு நடைபெறுகின்றன. நானும் நான்கு நாட்களாக இல்லத்தில்த் தங்கி எல்லாவற்றையும் பார்த்து அனுபவித்து வருகிறேன். இது தனியான அனுபவமே எனக்கு. குழந்தைகள் மாணவிகள் ஆசிரியைகள் எல்லாரும் ஒரே உத்ஸாகமாக இருக்கிறார்கள். சொ. முருகப்பாவும் மரகதவல்லியம்மையாரும் பிறவியோடு ஒட்டிய தங்கள் உத்ஸாகத்தையே எல்லோருக்கும் ஊட்டி விட்டார்கள். இல்லத்திற்கு வேறு என்ன வேண்டும்? சமுதாய சேவைக்காக அவர்கள் மேலும் மேலும் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். இதுவரை அருள் புரிந்து வந்த இறைவன் அந்தக் கனவுகளும் நனவாகக் காணும்படி அருள் புரிவானாக! "மகளிர் இல்லம்" நீடுழி நிலைபெறுக.

# முக்கிய நிகழ்ச்சிகள்.

8—11—38 நிலம் வாங்கப்பெற்றது

29—5—39 முதலாவது கட்டிடத்துக்கு கால்கோள் செய்யப் பெற்றது.

30—8—39 ஸ்ரீலஸ்ரீ சுவாமி விபுலானந்தா அவர்கள் பெண் பாடசாலையைத் திறந்து வைத்தார்கள்.

14—9—40 தேவகோட்டை ஜமீன்தார் அழ. அரு. ராம. வெள்ளையன் செட்டியார் அவர்கள் பெண்கள் ஆஸ்டலைத் திறந்து வைத்தார்கள்.

23—2—41 காரைக்குடி ஸ்ரீமான் நா. கு. ராமநாதன் செட்டியார் அவர்கள் மாண்டிசோரி ஆஸ்டல், தண்ணீர்க் குழாய், நீல விளக்குகளைத் திறந்து வைத்தார்கள்.

14—9—41 தேவகோட்டை ஸ்ரீமான் உ. மு. சுப. லெட்சுமணன் செட்டியார் அவர்கள் பெண் பாடசாலை மாணவிகள் வருஷாந்திரப் போட்டி விழாவுக்குத் தலைமை வகித்தார்கள்.

19—3—42 கானாடுகாத்தான் ராவ்பகதூர் க. வெ. சித. வெ. வேங்கடாசலம் செட்டியாரவர்கள் தலைமையில் மாண்டிசோரி பாடசாலை முதலாண்டுவிழா நடைபெற்றது.

1—2—43 செட்டிநாடு ராஜா சர் டாக்டர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தலைமையில் மாண்டிசோரி பாடசாலை 2-ம் ஆண்டு விழா நடைபெற்றது.

*